தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# தமிழறிவுப் போட்டி
# பன்னிரெண்டாம் வகுப்பு
# 2012

# தமிழறிவுப் போட்டி – 2012

## ஆண்டு - 12

## ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

## முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டுப் 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

# முதற் சுற்று

# 10 கேள்விகள்

1. இடைவெளியை நிரப்புக.

ஆசிரியரைக் கண்டதும் ---- ----- என பள்ளிக்கூட நாட்கள் என் நினைவுக்கு வந்தன.

சலசல

கலகல

பொலபொல

மளமள

1. விடை:

மள மள

2. எமது கல்வி நிலையத்கின் சின்னத்தில் உள்ள வாசகம் என்ன?

2. விடை:

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

3. நவரசங்களில் ஒன்று நகை
இங்கு நகை என்றால் என்ன?

1. காதில் கழுத்தில் அணிவது
2. சிரிப்பு
3. மருட்சி

3. விடை:

2. சிரிப்பு

4. இங்கு ஒன்று வேறுபட்டு நிற்கின்றது அது எது?

செய்மதி

செயற்கைக் கோள்

வெண்மதி

விண்வெளி ஆய்வுகூடம்

4. விடை:

வெண்மதி

5. “நிலா போன்ற முகம்” இதில் நிலா என்பது

உவமேயம்

உவமானம்

உவமை உருபு

5. விடை:

உவமானம்

6. “கற்க கசடறக் கற்பவை கற்றபின்

- நிற்க அதற்குத் தக”

6. விடை:

4) கல்வி கற்கும்போது சந்தேகம் எதுவுமின்றி கற்க வேண்டும். பின்பு கற்றவாறு நடக்கவேண்டும்.

7. “இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்ற பழமொழி வலியுறுத்தும் உண்மை?

7. விடை:

4.) சிறிய வயதில் கற்கின்ற கல்வி கற்களில் வெட்டப்பட்ட எழுத்துப் போல எப்போதும் நிலைத்து நிற்கும்

8. நரம்பு வாத்தியங்களில் ஒன்று

1.) நாதஸ்வரம்

2.) புல்லாங்குழல்

3.) வயலின்

8. விடை:

1.) வயலின்

9. ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசைகொண்டு வாழியவே என்பதில் வரும் இசை என்பதன் பொருள் என்ன?

9. விடை:

புகழ்

10. கோம்புஷ் தமிழ்க் கல்விநிலையத்தின் வெள்ளிவிழாப் பாடலிலிருந்து ........

கல்விக் கோயிலிலே கைகூப்பினோம்

தமிழ் அன்னையே தலை வணங்கினோம்.

இங்கு எழுவாய் என்ன?

10. விடை:

நாம்

முதற் சுற்று முடிவடைந்தது.

இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

1. தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு செய்யும் பணிகளில் ஒன்று கூறுக.

1. விடை:

அமரர் வேந்தனார் ஞாபகார்த்த

தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

பாடநூல் வெளியீடு

ஆசிரியர் பயிற்சி

12. அமரர் வேந்தனார் தமிழ்க்கல்விக்கு ஆற்றிய தொண்டில் குறிப்பிடத்தக்கது என்ன?

12 விடை: ஏதாயினும் ஒன்று

- 12ஆம் வகுப்புப் பரிட்சைக்கு தமிழை ஒரு பாடமாக எடுக்க முயற்சியெடுத்தமை

- 12ஆம் வகுப்பு பாடத்திட்டத்தை வடிவமைத்தமை

- தமிழ்ப் பாட நூல்களை உருவாக்குவதில் உழைத்தமை

13. சிட்னியில் வதியும் தமிழ்க் கவிஞர் ஒருவரின் பெயர் தருக.

13 விடை:

நடுவர் தீர்மானிக்கவேண்டும்.

14. புரட்சிக் கவிஞர் என்று பாரதிதாசன் ஏன் அழைக்கப்பட்டார்?

14 விடை:

சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடியமையால்

மூட நம்பிக்கைகளுக்கு எதிராகத் துணிச்சலுடன் குரல் கொடுத்ததால்

15. ஐவகை தமிழ் நிலங்களும் எவை?

15 விடை:

குறிஞ்சி

முல்லை

மருதம்

நெய்தல்

பாலை

16. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது புறநானூறு.

இங்கு கேளிர் என்பதன் பொருள் என்ன?

16 விடை:

சுற்றம்

17.

அண்மையில் எமது கல்வி நிலைய்ததிற்கு வருகை தந்த தமிழ் அறிஞர் யார்?

சுகி சிவம்

ஆறு திருமுருகன்

ரோபோ சங்கர்

17 விடை:

ஆறு திருமுருகன்

18. இது என்ன பூ?



18 விடை:

சூரியகாந்திப்பூ



19. “**அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல – தன்னை இகழ்வாரைப் பொறுத்தல் தலை**”

இக் குறளில் வலியறுத்தப்படும் விடயம்...

உண்மை

நேர்மை

பொறுமை

வலிமை

19 விடை:

பொறுமை

20. கோம்புஷ் தமிழ்க் கல்விநிலையத்தின் வெள்ளிவிழாப் பாடலிலிருந்து

அரிவையரும் ஆடவரும் ஓடிவந்தார்
கல்வியோடு கலைகளையும் கற்றறிந்தார்.

இங்கு அரிவையர் என்பது ?

20 விடை:

பெண்கள்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது

மூன்றாம் சுற்று

10 கேள்விகள்

அட்டவணை கேள்விகள்- சொல்லாக்கம்

விடைகள் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் இருக்கும்.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |

அட்டவணைக் கேள்விகள்

ஆசிரியர் கேள்விகளை வாசிக்கலாம்

உதாரணக் கேள்வி-

யானையை இப்படியும் அழைக்கலாம்.

(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்)

உதாரணக் கேள்வி-

யானையை இப்படியும் அழைக்கலாம்.

(அட்டவணை காண்பிக்கப்படும் போது விசையை (BUZZER) யாராவது அழுத்தினால் உடனடியாக அட்டவணை மறைக்கப்படும்) விடை A-1 கரி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | க | பு | ல் | லை | சா |
| 2 | ரி | று | அ | த் | தை |
| 3 | ப | மு | த் | து | ளி |
| 4 | வி | ம் | கு | ரு | ளை |
| 5 | வ | ளை | யா | ப | தி |

21. Computer என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் என்ன?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | ஙா |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஞ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | ஹ | ஜ | ன் |

21. விடை:

E5 கணினி

22.

குதிரைக்கு இன்னொரு சொல் என்ன?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | நூ |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஞ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | னு | ஜ | ன் |

22. விடை:

D4 புரவி

## 23. Video Clip என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் என்ன?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | நூ |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஒ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | ஹு | ஜ | ன் |

23. விடை:

# A3 காணொளி

# 24. தலைவனைக் குறிக்கும் சொல்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | நூ |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஒ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | ஞு | ஜ | ன் |

24. விடை:

C4 நாதன்

25. இல்லான் என்பதன் பொருள்

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | நூ |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஞ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | னு | ஜ | ன் |

25. விடை:

A1 இல்லாதவன்

26. Facebook என்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் என்ன?

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | நுா |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஞ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | னு | ஜ | ன் |

26. விடை:

A7 முகநூல்

# 27. நோபல் பரிசு பெற்ற கணிதமேதை

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| A | இ | ரு | கா | ளை | தா | வி | மு |
| B | ல் | சு | ணொ | ய | ம் | ண் | க |
| C | லா | கா | ளி | நா | த | ன் | நு |
| D | த | சி | ம் | பு | ர | வி | ல் |
| E | வ | லை | ஞ | ன் | க | ணி | னி |
| F | ன் | இ | ரா | மா | னு | ஜ | ன் |

27. விடை:

F2 இராமானுஜன்

28.

அரிவையரும் ஆடவரும் ஓடிவந்தார்
கல்வியோடு கலைகளையும் கற்றறிந்தார்.

அரிவையரும் ஆடவரும் இங்கு கற்பது என்ன

28. விடை:

கல்வி

கலைகள்

29.

“பொன்மாலைப் பொழுது - இது ஒரு
பொன்மாலைப் பொழுது
வானமகள் நாணுகின்றாள்
வேறு உடை பூணுகின்றாள்

இப்பாடலில் கவிஞர்
“வேறு உடை பூணுகின்றாள்” என்று
எதனைக் குறிப்பிடுகிறார்?

29. விடை:

சிவப்பாக மாறுவதை

வேறு நிறமாக மாறுவதை

அல்லது வேறு பொருத்தமான விடை

30. கலங்கரை விளக்கு என்பதன் பொருள் என்ன?

30. விடை:

கப்பல்களுக்கு வழிகாட்ட கடற்கரையில் அமைக்கப்படும் வெளிச்சக்கூடு

மூன்றாம் சுற்று நிறைவுபெற்றது

காலிறுதிச் சுற்று

10 கேள்விகள்

1. தமிழிலக்கிய வரலாற்றில் காப்பியங்கள் அதிகம் தோன்றிய காலம் எது?

1. விடை:

சோழர் காலம்

2. சத்திய சோதனை என்ற சுயசரிதை நூலை எழுதியவர் யார்?

2 விடை: மகாத்மா காந்தி

3. இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுபவை எவை?

3 விடை:

சிலப்பதிகாரம்

மணிமேகலை

4. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமாகப் பூர்த்திசெய்க.

தொல்காப்பியம் என்பது தமிழில் ………..

4 விடை:

தொல்காப்பியம் என்பது தமிழில் எழுந்த முதல் இலக்கண நூல்

5. பாஞ்சாலி சபதத்தை இயற்றியவர் யார்?

5 விடை:

பாரதியார்

6. வேறு மொழிகளின் சொற்கலப்பில்லாத தனித்தமிழ் என்ற எண்ணத்தை உருவாக்கியவர் யார்?

6 விடை:

மறைமலையடிகள்.

7. தமிழர்களின் பாரம்பரிய நடனக் கலைகளில் ஒன்றின் பெயர் தருக.

7. விடை:

(நடுவர் தீர்மானத்திற்கு)

8. தமிழ்க் கல்வி நிலையக் கீதத்தின் முதல் இரு அடிகளையும் கூறுக.

8. விடை:

தமிழ் மொழிக் கல்வி தரும் கோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் வாழ்க

9. தமிழ் ஆராய்ச்சி என்பதை சேர்த்து எழுதினால் வருவது

1. தமிழாராட்சி
2. தமிழாராச்சி
3. தமிழாராய்ச்சி

9. விடை:

3. தமிழாராய்ச்சி

10. நல்லூரில் இருந்து நல்லாட்சி செய்த தமிழ் அரசன் யார்?

15. விடை:

சங்கிலியன்

காலிறுதிச் சுற்று நிறைவுபெற்றது

அரைஇறுதிச் சுற்று

15 கேள்விகள்

1. If you fail to plan, you plan to fail in life

என்ற வாக்கியத்தைத் தமிழில் கூறுக.

1. விடை:

நீங்கள் திட்டமிடுவதற்குத் தவறினால் வாழ்க்கையில் தவறுவதற்குத் திட்டமிடுகிறீர்கள்

2.சிட்னியிலிருந்து வெளிவரும் வண்ணத் தமிழ்ச் சஞ்சிகை இரண்டின் பெயர் தருக

2. விடை

தமிழ் ஓசை,

தென்றல்

3. சிட்னியில் இருந்து வெளிவரும் இணையத் தமிழ் இதழ் எது?

3. விடை:

தமிழ் முரசு

4. இப்படத்தில் நீங்கள் பார்ப்பது என்ன?

முழுமையான மூன்று வாக்கியங்களில் கூறவும்



4. விடை:

முழுமையான மூன்று வாக்கியங்கள்

முக்கியமான சொற்கள்:

படகு முனிவர் வேடுவன் மேடை

அல்லது நாடகம்

5. வை திஸ் கொலை வெறி என்பதைத் தமிழில் எப்படிக் கூறலாம்?

5. விடை:

ஏனிந்தக் கொலைவெறி?

6. இடவெளியை நிரப்புக.

----------------------- வாழ்கின்ற மக்களே வாழ்க்கையில் தோல்வியடைவர்.

பேராசையுடன்

வலிமையுடன்

குறிக்கோளுடன்

அன்புடன்

6. விடை:

பேராசையுடன்

7. அப்துல் கலாம் எழுதிய சுயசரிதையின் பெயர் என்ன?

7. விடை:

அக்கினிச் சிறகுகள்

8. தமிழ் மொழிக்கு அண்மைக் காலத்தில் கிடைத்த சிறப்பு யாது?

பொன்மொழி என்ற அங்கீகாரம்

நல்ல மொழி என்ற அங்கீகாரம்

பழமை வாய்ந்த மொழி என்ற அங்கீகாரம்

செம்மொழி என்ற அங்கீகாரம்

8. விடை:

செம்மொழி என்ற அங்கீகாரம்

9. தமிழ் ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்துக் காப்பாற்றி நூல்களாகப் பதிப்பித்தவர் யார்?

9. விடை:

உ.வே.சாமிநாதையர்.

10. மங்களம் பாடுதல் என்றால் என்ன?

10 விடை:

நிகழ்ச்சியை நிறைவு செய்யப் பாடும் பாட்டு

11. **பின்வரும் திருக்குறளை நிறைவு செய்க.**

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

................................

11. விடை:

என்பும் உரியர் பிறர்க்கு

12. தமிழகராதியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

12. விடை:

**வீரமாமுனிவர்**

13.

11ஆம் 12ஆம் வகுப்புப் பாடப்பரப்பில் வரும் தலைப்புகள் மூன்று பெரும் பிரிவுகளில் அடங்குகிறன. அவை என்ன?

13. விடை:

தனிமனிதன்

தமிழ்ப் பேசும் சமூகம்

மாறிவரும் உலகம்

14. கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் சமூகப் பணிகளில் ஒன்றைக் குறிப்பிடுக.

14. விடை:

முதியோர் இல்லம் அமைத்தமை

பெண்கள் இல்லம் பராமரிப்பு

மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லம் அமைத்தமை

மருத்துவமனைகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்ய ஏற்பாடுகள் செய்தமை

15. விகடகவி என்ற சொல்லின் சிறப்பு என்ன?

15 விடை:

முன்னிருந்து வாசித்தாலும் பின்னிருந்து வாசித்தாலும் ஒரே வார்த்தையாகும்.

அரை இறுதிப்போட்டி நிறைவுற்றது.

# இறுதிப்போட்டி

## 15 கேள்விகள்

1. Tamil Diaspora என்பதன் பொருள் என்ன?

1. விடை:

தமது சொந்த மண்ணை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் வாழும் தமிழர் (புலம்பெயர் தமிழர்)

2. நீங்கள் பார்க்கும் காட்சி என்ன?

பொருள் பொதிந்த இரு வாக்கியங்களில் குறிப்பிடுக.



2.

பொருள் பொதிந்த இரு வாக்கியங்கள்




நடுவர் :

3. Sydney Tamil Resource Centre
என்பதன் தமிழ்ப் பெயர் என்ன?

3. விடை:

சிட்னி தமிழ் அறிவகம்

4. தமிழரின் பாரம்பரிய விளையாட்டு ஒன்று தருக

4. விடை:

கிளித்தட்டு

5. மருத நிலம் என்றால் என்ன?

5. விடை:

வயலும் வயல் சார்ந்த இடமும்

6. கொடையிற் சிறந்தவன் யார்?

6. விடை:

கர்ணன்

7. “Homeland" என்பதன் தமிழ்ப்பதம்  என்ன?

7. விடை:

தாய்நாடு

தாய் மண்

8. “Train" என்பதற்கு தற்காலத்தில் வழங்கும் தமிழ்ப்பதம் என்ன?

8. விடை:

தொடருந்து

9.

வசன நடை கைவந்த வல்லாளர் என்று போற்றப்படும் தமிழ் அறிஞர் யார்?

9. விடை:

ஆறுமுக நாவலர்

10. முதலில் இருந்து வாசித்தாலும் அடியிலிருந்து வாசித்தாலும ஒன்றாக அமையம் சொற்கள் 2 கூறுக.

10. விடை:

திகதி, பாப்பா, தாத்தா, விகடகவி, மாமா

11. நி.ச.வே மாநிலத்தில் எந்த ஆண்டு முதல் HSC பரீட்சை நடைபெற்று வருகிறது?

11. விடை:

2001ஆம் ஆண்டு முதல்

12. Film Review என்பதற்கு உரிய தமிழ்ப் பதம் என்ன?

12. விடை:

திரைப்பட விமர்சனம்

13. நாயக்கமன்னர் கிருஷ்ணதேவராயருடைய சபையில் சிரிக்கவும் சிந்திக்கவும் கதை கூறிய விகடகவி யார்?

13. விடை:

தெனாலி ராமன்

14. தமிழர்களால் அண்மையில் சிட்னியில் அமைக்கப்பட்ட விழா மணடபத்தின் பெயர் என்ன?

14. விடை:

துர்கை அம்மன் மண்டபம்

15. ஈழத்தில் சமய சமூகப் பணிகள் செய்த அன்னை. இவர் யார்?



# இறுதிப்போட்டி நிறைவுற்றது.

# நன்றி

# மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்.........

15. “உள்ளங்கை நெல்லிக்கனிபோல”

இதன் கருத்தென்ன?

15 விடை:

அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

1. விடை:

வெளிப்படையாகத் தெரிவது

3. சுவாமி விபுலானந்தர் சிலம்பை ஆராய்ந்து எழுதிய நூலின் பெயர் என்ன?

3. விடை:

யாழ் நூல்.